## கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் 05.07.2023 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள்:1**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட காஞ்சிரங்குடி கிராம புல எண். 470/1C ல் கண்ட வார்டு எண்.06, கிழக்கு தெருவில் 2715 சதுரஅடி நிலத்தை கீழக்கரை நகராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்களின் நலன் கருதி பாதை புழக்கத்திற்காகவும், நகராட்சி ஆணையர் அவர்களுக்கு இந்த இடத்தை நன்கொடையாக தச்சர் தெருவில் வசிக்கும் திரு. ஏ.கே.எஸ். ஹமீது சுல்தான், த/பெ. ஏ-கே.அகமது கபீர் மற்றும் இவரது தம்பி திரு.ஏ.கே.எஸ். ஹிதாயத்துல்லா கீழக்கரை ஆகிய 2- பேரும் மேற்படி இடத்தை பொதுமக்களுக்கு பாதையாக இந்நகராட்சிக்கு வழங்க உள்ளார் என்பதை தெரிவித்தல்.

**தீர்மானம் எண்.382**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 2**

**கீழக்கரை நகர்மன்ற 12-வது வார்டு உறுப்பினர் திருமதி. உம்மு சல்மா பீவி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | 12வது வார்டு தெற்குத்தெரு கருணை கறிக்கடை எதிர்சந்து பகுதியில் தேங்கும் கழிவுநீரால் அப்பகுதி பொதுமக்கள் பலவருடமாக அவதிப்பட்டு வருவதால், அப்பகுதியில் புதிதாக கழிவுநீர் குழாய் அமைத்து தர கோருதல். |
| 2. | 12வது வார்டு தெற்குத்தெரு சுபியான் வீட்டு சந்து பகுதியில் பள்ளமான பகுதியாக இருப்பதால் மழைக்காலங்களில் தண்ணீர் உள்ளே தேங்கி பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. புதிய கழிவுநீர் குழாய் அமைத்து, தாழ்வான பகுதியை உயர்த்தி தரக் கோருதல். |
| 3. | 12வது வார்டு பீர்னா வெட்டை சந்து பகுதியில் அப்பகுதிமக்களின் வேண்டுகளுக்கிணங்க, அப்பகுதியில் பீர்னா வெட்டை சந்து என்ற Stainless steel தெருப்பலகை அமைத்து தரக் கோருதல். |

**அலுவலக்குறிப்பு**

மேற்காணும் நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**தீர்மானம் எண்.383** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்துவதற்கு, ஒருங்கிணைப்பு சமையற்கூடங்களுக்கான கட்டடம் அமைக்கும் பணி நடைபெற்றுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எ.ண்.1740.2022.எம்-1, நாள். 10.03.2023ல் தெரிவித்துள்ளவாறு, அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு கால அட்டவணையின்படி ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட இரண்டு அரசு பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு சமையல் செய்து உணவு வழங்கும் பணிக்கு ரூ. 2.09 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 256/2023/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு சமையல் செய்து உணவு வழங்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.384</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி ரூ. 2.09 இலட்சம் மதிப்பிட்டில் மேற்கொள்வதற்கு, இந்நகர்மன்றத் தலைவரிடம் 25.04.2023-ந் தேதி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, 31.05.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு ரூ. லட்சம் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் 2022-23)** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணி | 2.09 | ATHEEQ TRADERS / Muthupandi. 12/102, மேலத்தெரு, கீழக்கரை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.78% விட குறைவு |
| | | | திரு. கே. முனீஸ்குமார், களரி, திருஉத்தரகோச மங்கை, கீழக்கரை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 5.47% விட அதிகம் |

(கோப்பு எண். 256/2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ATHEEQ TRADERS / Muthupandi., கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.385**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 5**

கீழக்கரை நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனமான தினசரி சந்தை கட்டணம் வசூல் உரிமம் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 257, நாள். 28.02.2023-ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து 16.06.2023-ந்தேதி மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்வி மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**ஏலக்கேள்வி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு. எஸ்.என். மணிகண்டன்<br>21/17, தட்டான்தோப்பு தெரு , கீழக்கரை | 3,06,000/- |
| 2. | திரு.எஸ். முரளி | 3,01,000/- |

| | | |
|---|---|---|
| | த/பெ. சுப்பிரமணியன்,<br>மறவர் தெரு, கீழக்கரை | |
| 3. | திரு. ஏ. முகம்மது ஹனீப் சுபியான்<br>த/பெ. அஸ்ரப் அலி,<br>18/95, தெற்குத் தெரு, கீழக்கரை | 3,03,000/- |
| 4. | திரு.கே. ஜி, பிரபாகரன்,<br>த/பெ. கணேசன்,<br>மறவர் தெரு, கீழக்கரை | 3,07,000/- |
| | | |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. | |

**(கோப்பு எண்.220/2023/அ2)**

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் விபரப்படியான ஏலக்கேள்வி தொகை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகைகளின் அதிகபட்சமான ஏலக்கேள்வி ரூ. 3,07,000/- கோரியுள்ள திரு.கே.ஜி.பிரபாகரன், கீழக்கரை அவர்களின் ஏல உரிமத் தொகையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.386**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 6**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 கிழக்குத்தெரு பகுதியில் புதிதாக கழிவுநீர் குழாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.321, நாள். 31.03.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2022-23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 கிழக்குத்தெரு பகுதியில் | 3,25,000 | திரு. எஸ். முரளி<br>1/59 மறவர் தெரு,<br>கீழக்கரை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.06% விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதிதாக கழிவுநீர் குழாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | | திரு. எஸ். சுரேஷ் தங்கப்பா நகர் இராமநாதபுரம் | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.70% விட அதிகம் |

கோப்பு எண்.284/2023/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ். முரளி, கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.387</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொருள் : 7</u>

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் பகுதியில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் பழுதடைந்துள்ள சுற்றுச்சுவர் பகுதியினை சீரமைப்பு பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.318, நாள். 31.03.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>வருவாய் நிதி 2022–23</u>** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் பகுதியில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் பழுதடைந்துள்ள சுற்றுச்சுவர் பகுதியினை சீரமைப்பு பணி | 5,40,000 | திரு. ஏ. முகம்மது ஹனிப் சுபியான், 18/95, தெற்குத்தெரு-1 கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.07% விட குறைவு |
| | | | திரு.பி.எம். கஜேந்திரன் 21/33 தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.51% விட அதிகம் |

கோப்பு எண்.281/2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.முகம்மது ஹனிப் சுபியான், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.388**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 8**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் பகுதியில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கு முன் பகுதியில் நுழைவுவாயில் கேட் மற்றும் RCC சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.319, நாள். 31.03.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் பகுதியில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கு முன் பகுதியில் நுழைவுவாயில் கேட் மற்றும் RCC சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 5,00,000 | திரு. ஏ. முகம்மது ஹனிப் சுபியான், 18/95, தெற்குத்தெரு-1 கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.14% விட குறைவு |
| | | | திரு.பி.எம். கஜேந்திரன் 21/33 தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 1.47% விட அதிகம் |

கோப்பு எண்.282/2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. முகம்மது ஹனீப் சுபியான், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.389**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 9</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு வார்டு பகுதிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை அகற்றி விட்டு, புதிதாக சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் சேதமடைந்துள்ள சாலைகளை, பேட்ச் ஒர்க் செய்யும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.278, நாள். 28.02.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு வார்டு பகுதிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை அகற்றி விட்டு, புதிதாக சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் சேதமடைந்துள்ள சாலைகளை, பேட்ச் ஒர்க் செய்யும் பணி | 3,50,000 | திரு. ஏ. முகம்மது ஹனிப் சுபியான், 18/95, தெற்குத்தெரு-1 கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.01% விட குறைவு |
| | | | திரு.பி.எம். கஜேந்திரன் 21/33 தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.14% விட அதிகம் |

கோப்பு எண்.203/2023/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. முகம்மது ஹனீப் சுபியான், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.390</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 10**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 புதுக்குடி பகுதியில் அமைந்துள்ள பழைய கழிவுநீர் பம்பிங் ஸ்டேசன் மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்தி மேற்படி இடத்தில் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.325, நாள். 31.03.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 புதுக்குடி பகுதியில் அமைந்துள்ள பழைய கழிவுநீர் பம்பிங் ஸ்டேசன் மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்தி மேற்படி இடத்தில் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி. | 85,000 | திரு. ஏ. முகம்மது ஹனிப் சுபியான், 18/95, தெற்குத்தெரு-1 கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.13% விட குறைவு |
| | | | திரு.பி.எம். கஜேந்திரன் 21/33 தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.87% விட அதிகம் |

கோப்பு எண்.213/2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. முகம்மது ஹனீப் சுபியான், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.391**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 11</u>**

கீழக்கரை நகராட்சி வார்டு எண்.8, தெற்குத் தெரு பிரதான சாலையில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண். , நாள். 31.03.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.8, தெற்குத் தெரு பிரதான சாலையில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி, | 8,00,000 | திரு. பி. சிவக்குமார் 21/52 மெயின்ரோடு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.12% விட குறைவு |
| | | | திரு. எம். சரவணன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.47% விட அதிகம் |

கோப்பு எண்.452 /2023/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.சிவக்குமார், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.392</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 12</u>**

கீழக்கரை நகராட்சிக் குட்பட்ட வார்டு எண். 12 நடுத்தெரு மற்றும் தச்சர் தெரு முதல் சந்து (குறுக்கு தெரு) பகுதிகளில் சேதமடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.277, நாள். 28.02.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக் குட்பட்ட வார்டு எண். 12 நடுத்தெரு மற்றும் தச்சர் தெரு முதல் சந்து (குறுக்கு தெரு) பகுதிகளில் சேதமடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி. | 4,20,000 | திரு.பி.எம். கஜேந்திரன் 21/33 தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.03% விட குறைவு |
| | | | திரு. ஏ. முகம்மது ஹனிப் சுபியான், 18/95, தெற்குத்தெரு-1 கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.32% விட அதிகம் |

கோப்பு எண்.202 /2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.எம். கஜேந்திரன், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.393**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 13**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6 கிழக்குத் தெரு பகுதிகளில் சேதமடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.276, நாள். 28.02.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6 கிழக்குத் தெரு பகுதிகளில் சேதமடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி. | 4,20,000 | திரு. பி. சிவக்குமார் 21/52 மெயின்ரோடு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.09% விட குறைவு |
| | | | திரு. எம். சரவணன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.95% விட அதிகம் |

கோப்பு எண்.201/2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி. சிவக்குமார், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.394**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 14**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 வடக்குத்தெரு இம்பாலா உசைன் வீடு அருகில் பழுதடைந்த கழிவுநீர் பைப்லைன் மாற்றி புதிதாக கழிவுநீர் பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.327, நாள். 31.03..2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 வடக்குத்தெரு இம்பாலா உசைன் வீடு அருகில் பழுதடைந்த கழிவுநீர் பைப்லைன் மாற்றி புதிதாக கழிவுநீர் பைப்லைன் அமைக்கும் பணி. | 2,50,000 | திரு. பி. சிவக்குமார் 21/52 மெயின்ரோடு, கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.09% விட குறைவு |
| | | | திரு. எம். சரவணன் ஒப்பந்ததாரர், கீழக்கரை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.16% விட அதிகம் |

கோப்பு எண்.294 /2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி. சிவக்குமார், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.395**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 15**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்தல், கேட் வால்வு, Sluice Valve, Starter பொருத்தி உடனுக்குடன் சரி செய்யும் பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.366, நாள். 31.05..2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 16.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2022–23** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்தல், கேட் வால்வு, Sluice Valve, Starter பொருத்தி உடனுக்குடன் சரி செய்யும் பணி. | 3,50,000 | திரு. எஸ். முரளி 1/59 மறவர் தெரு, கீழக்கரை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.21% விட குறைவு |
| | | | திரு. எஸ். சுரேஷ் தங்கப்பா நகர் இராமநாதபுரம் | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 1.43% விட அதிகம் |

கோப்பு எண்.502 /2023/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ். முரளி, கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.396</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 16</u>**

15-வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை 2022-23 (Tied Grant -2022-23) திட்டத்தின் கீழ். கீழக்கரை நகராட்சிக்கு ரூ.0.50 லட்சம் மதிப்பீட்டில், பணி மேற்கொள்ள, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.380, நாள். 31.05.2023-ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3096/2022/பி2, நாள். 02.06.2023-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 22.06.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>திட்டம் / வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>சதவீதம்</th></tr>
<tr><td colspan="5">15-வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை 2022-23 (Tied Grant -2022-23)</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">Supply, Delivery & Installation of 50x60 LPM submersible motor pump set and 110 mm dia PVC 6 Ksc pipe line arrangements in New compost yard (pallamorekulam)</td><td rowspan="2">50,000/–</td><td>திரு. ஏ. முகம்மது ஹனிப் சுபியான்,<br>18/95, தெற்குத்தெரு-1<br>கீழக்கரை</td><td>மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.01% விட குறைவு</td></tr>
<tr><td>திரு.எஸ். முரளி,<br>மறவர் தெரு,<br>கீழக்கரை</td><td>மதிப்பீட்டு விலைவிகிதத்தினை 0.33% விட அதிகம்</td></tr>
</table>

(கோப்பு எண். 751/2022/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. முகம்மது ஹனீப் சுபியான், கீழக்கரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.397**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 17**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.9192/2022/SBM1, நாள். 04.05.2023-ந் தேதிய கடிதத்தில் நகர்புறத்தில் 1 லட்சம் மக்கள் தொகைக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் சுத்தகரிக்கப்படாத வீட்டு புழங்கு மூலம் வெளியேற்றப்படும் கழிவு நீரினை முறையாக சேகரம் செய்து சுத்தகரிப்பு செய்து மறு உபயோகம் செய்திட ஏதுவாக கசடு கழிவு சுத்தகரிப்பு நிலையம் (STP) இடை மறித்தல் மற்றும் திசை திருப்புதல் முறையில் அமைத்திட வரைபடங்கள் மற்றும் தள அமைப்புகளுடன் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்து சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு மக்கள் தொகை உயர்வு சராசரியாக கணக்கீட்டின்படி, கீழக்கரை நகராட்சியில் உருவாகும் புழங்கு நீரின் அளவு 5.20 MLD ஆகும். மேற்காணும் அளவின்படி கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் (STP) அமைக்க, ஸ்தல அளவீடு செய்தல், வரைபடங்கள் தயார் செய்தல், மண் பரிசோதனை, கட்டுமான வடிவமைப்புடன் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டியுள்ளது. எனவே, Sewage Tratement Plant (STP) Interception and Division முறையில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்ய Consultant நியமனம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, மேற்காணும் பணி உரிய Consultant நிறுவனம் மூலம் செய்வதற்கு உரிய விலைப்புள்ளி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும், அதற்குண்டான

செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.525 /2023/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படியும், கீழக்கரை பொதுமக்களின் பொதுசுகாதாரத்தினை கருத்தில் கொண்டும், இந்நகராட்சியில் கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் (STP) அமைப்பதற்கு, மேற்கண்டவாறு Sewage Tratement Plant (STP) Interception and Division முறையில் அமைத்திட விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்ய Consultant நியமனம் செய்வதற்கு, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.398**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 18**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் (STP) இடை மறித்தல் மற்றும் திசை திருப்புதல் முறையில் அமைத்திட வரைபடங்கள் மற்றும் தள அமைப்புகளுடன் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்து சமர்ப்பிக்க Consultant நியமனம் செய்வதற்கு, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 01.06.2023-ந் தேதி முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்காணும் பணிகள் செய்வதற்கு 08.06.2023ந் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">பொருட்கள் விபரம்</th><th colspan="3">நிறுவனத்தின் பெயர்கள்</th></tr>
<tr><th>ayothy consultancy, Sivagiri</th><th>PSM Engineering & Construction, Chennai</th><th>SAMA Construction & Developments, Chennai</th></tr>
<tr><td>1</td><td>Preparation of all drawings.</td><td rowspan="3">1.5% excluding GST from the Total project estimate cost</td><td rowspan="3">1.8% excluding GST from the Total project estimate cost</td><td rowspan="3">2.0% excluding GST from the Total project estimate cost</td></tr>
<tr><td>2</td><td>Fixing the leveling points using DGPS Survey</td></tr>
<tr><td>3</td><td>Preparation of Detailed Estimate and Abstract Estimate.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | Preparation of Tender Schedule | | | |
| 5 | Structural Design | | | |
| 6 | Preparation of Soil investigation and Report | | | |
| 7 | Preparation of Bid Document | | | |
| 8 | Preparation of rate analysis (DATA) | | | |
| 9 | Assisting to get Administrative sanction and Technical Sanction from the competent authorities by attending remarks and quarries. | | | |
| 10 | Three sets of hard copies and soft copies for the entire item should be submitted. | | | |
| 11 | If additional required by the municipality if should be submitted by consultant on additional charges | | | |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் இந்நகராட்சி பொறியாளர்களின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, ayothy consultancy, Sivagiri குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை அங்கீகரிக்கும் பொருட்டு இந்நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 525/2023/இ1)

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிகள் மேற்கொள்ள குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ayothy consultancy, Sivagiri நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு 12.06.2023-ந் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.399**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 19**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19, படிமைய கஸ்டம்ஸ் ஆபிஸ் சாலையில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2012-13-ன் கீழ், 12 மீட்டர் உயரமுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு இயக்கத்தில் இருந்து வந்தது. தற்பொழுது இந்த உயர்கோபுர மின்விளகு தூணின் அடிப்பாகம் துருப்பிடித்து அரித்து காணப்படுகிறது. மேலும் எப்பொழுது சாய்ந்து விழும் அபாய நிலையில் உள்ளது. இதன் காரணமாக பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் இவ்விடத்தை அச்சத்துடனே கடந்து செல்லும் நிலை உள்ளது. மேலும், இவ்வுயர் கோபுர மின்விளக்கு அருகிலேயே EB டிரான்ஸ்பார்மரும் இருப்பதால் ஏதேனும் மிகப்பெரிய ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளதெனக் கூறி அப்பகுதி பொதுமக்கள் உடனடியாக இந்த உயர்கோபுர மின்விளக்கினை அகற்றிட கோரி தொடர்ந்து புகார் அளித்து வருகிறார்கள். எனவே, ஆபத்தான நிலையிலும், பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் உள்ள மேற்படி உயர்கோபுர மின்விளக்கினை அகற்றிட வேண்டியது அவசியமாகிறது. மேற்காணும் பணி மேற்கொள்ள ரூ. 48,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் பணிக்குண்டான செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது

(கோப்பு எண்.596/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவரச அவசியம் கருதி வாங்குவதற்கு செலவினம் ரூ48,000/- யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.400**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 20**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் உரக்கிடங்கில் வளமீட்பு மையம் (Resource Recovery Centre) மற்றும் பொருள் மீட்பு மையம் (Material Recovery Centre) ஆகிய இடங்களில் மீட்கப்படும் பொருட்களை சேமிக்க பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே, இம்மையங்களுக்கு அருகிலேயே உள்ள காலி இடத்தில் இரும்பிலான செயின்லிரிக் வேலி அமைத்தால் பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்க ஏதுவாக இருக்கும். எனவே, மேற்காணும் பணி மேற்கொள்ள ரூ. 1,55,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிக்குண்டான செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது

(கோப்பு எண்.595/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) பணியின் அவரச அவசியம் கருதி வாங்குவதற்கு செலவினம் ரூ. 1,55,000/-யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.401**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 21**

கீழக்கரை நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் இயங்கி வந்த Mahindra Bolero LX 2WD 7STR TN–65–E 8373 ஈப்பு வாகனம் முதிர்ந்த நிலையில் கழிவு செய்ய தொழில்நுட்ப வல்லுநர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, ஈப்பு வாகனம் விற்பனை செய்வதற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண். நாள்.31.05.2023-ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, 21.06.2023-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்வி மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**ஏலக்கேள்வி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு- க. சரவணக்குமார்,<br>2/113, முத்துச்சாமிபுரம் , கீழக்கரை | 79,600/- |
| 2. | திரு. ஏ. முகம்மது ஹனீப் சுபியான்<br>த/பெ. அஸ்ரப் அலி,<br>18/95, தெற்குத் தெரு, கீழக்கரை | 79,800/- |
| 3. | திரு. அல் அப்ரான்,<br>த/பெ. அப்துல் கலாம்,<br>11.241, என்.எம்.டி. தெரு,<br>கீழக்கரை. | 79,900/- |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. | |

(கோப்பு எண்.950/2017/ இ1)

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் விபரப்படியான ஏலக்கேள்வி தொகை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகைகளின் அதிகபட்சமான ஏலக்கேள்வி ரூ. 79,900/- கோரியுள்ள திரு.அல் அப்ரான், கீழக்கரை அவர்களின் ஏல உரிமத் தொகையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.402**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 22**

கீழக்கரை நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் 2022-2023-ன் கீழ், நகராட்சிக்குட்பட்ட அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரி மதுரை மணி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்குரிய விளம்பர கட்டணம் ரூ. 15,876/- வழங்க கோரி மதுரை மணி நாளிதழ் பில் பட்டியல் எண். 2023-2024/41, நாள். 29.04.2023-ன்படி இந்நகராட்சிக்கு 02.05.2023-ந் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ. 15,876/-யை மதுரை மணி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.256/20223இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்காணும் விவரப்படியான விளம்பரம் மதுரை மணி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ. 15,876/-யை மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கவும், இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.403**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 23**

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இராமநாதபுரம் மூலம் மதிப்பீடு ரூ.211.32 கோடி மதிப்பீட்டில் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தும் பொருட்டு, அடிக்கல் நாட்ட வரும் மாண்புமிகு நகர்புற உள்ளாட்சி அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்களையும் மற்றும் மதிப்பிற்குரிய இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களையும் கீழக்கரை நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர் பொதுமக்கள் சார்பாக வரவேற்று, தினமலர் நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்குரிய விளம்பர கட்டணம் ரூ. 22,260/- வழங்க கோரி தினமலர் நாளிதழ் பில் பட்டியல் எண். 115, நாள். 27.05.2023-ன்படி இந்நகராட்சிக்கு 30.05.2023-ந் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ. 22,260/- யை தினமலர் நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.256/20223இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்காணும் விவரப்படியான விளம்பரம் தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ. 22,260/- யை மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கவும், இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.404</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 24</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, புதுக்குடி தெரு, (MLMS முதல் அல் பக்கீர் கார்டன் மற்றும் இஸ்லாமியா தமிழ்வழி பள்ளி அருகில்) மற்றும் வார்டு எண்.3, தெற்கு வெள்ளாளர் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் புழங்கும் நீரினை கழிவுநீர் குழாய்கள் அமைத்து வெளியேற்றப்பட்டு வருகிறது. இக்கழிவு நீர் குழாய்கள் அமைத்து பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், பல இடங்களில் ஆங்காங்கே சேதமடைந்து கழிவுநீர் சாலையில் வெளியேறுகிறது. இது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமம் ஏற்படுவதோடு சுகாதார சீர்கேட்டையும் உண்டாக்குகின்றது. எனவே, மேற்காண் பகுதிகளில் பொதுசுகாதாரம் மற்றும் போக்குவரத்து நலன் கருதி சேதமடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை அகற்றி புதிதாக கழிவுநீர் குழாய் பதித்தல் அவசியமாகிறது. மேற்காணும் பணி மேற்கொள்ள ரூ. 4,30,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மேற்காணும் பணிக்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது

(கோப்பு எண்.601/2023/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிக்கான செலவினம் ரூ4,30,000/- யை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.405</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 25</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13, மணியன்வேட்டை பகுதியில் உள்ள வீடுகளில் புழங்கும் நீரினை கழிவுநீர் குழாய்கள் அமைத்து வெளியேற்றப்பட்டு வருகிறது. இக்கழிவு நீர் குழாய்கள் அமைத்து பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், பல இடங்களில் ஆங்காங்கே சேதமடைந்து கழிவுநீர் சாலையில் வெளியேறுகிறது. இது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் சிரமம் ஏற்படுவதோடு சுகாதார சீர்கேட்டையும் உண்டாக்குகின்றது. எனவே, மேற்காண் பகுதிகளில் பொதுசுகாதாரம் மற்றும் போக்குவரத்து நலன் கருதி சேதமடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை

அகற்றி புதிதாக கழிவுநீர் குழாய் பதித்தல் அவசியமாகிறது. பொதுசுகாதாரம் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்கண்ட பணிக்கு ரூ. 3,85,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.597/2023/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பொதுசுகாதாரம் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்காணும் பணிக்கான செலவினம் ரூ3,85,000/- யை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.406</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 26</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. இந்த அம்மா உணவக கட்டிடம் கட்டி 8 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்பொழுது இக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த Felse Ceiling மற்றும் கூரை (Truss) ஆகியன சேதமடைந்துள்ளன. மேலும், வயரிங் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. சேதமடைந்துள்ள PVC கதவுகளை மாற்ற வேண்டியுள்ளது. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.2,25,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கான செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.598/2023/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிக்கான செலவினம் ரூ2,25,000/- யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.407</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 27</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக மாடியில் நகர்மன்ற கூட்ட அரங்கு (Coucil Hall) அடிப்படை வசதிகளற்றதாக உள்ளது. இக்கூட்ட அரங்கில் நவீன வசதியுள்ள புரஜெக்டர், கார்டுவெல் மைக், ஸ்பீக்கர், ஆம்பியர் ஆகிய வசதிகளை செய்த தரக்கோரி நகர்மன்ற உறுப்பினர்களால் கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் வசதிகளை செய்து முடிக்க நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தியதன்படி, மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.4,15,000/-க்கு மதிப்பீடு

தயார் செய்யப்பட்டுள்ளது.. மேற்காணும் பணிக்கான செலவினம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.599/2023/இ1

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிக்கான செலவினம் ரூ4,15,000/-யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.408**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 28**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 பகுதிகளில் தார்ச்சாலைகளை மறு சீரமைத்தல் பணி நெடுஞ்சாலை துறை மூலம் நடைபெற்று வருகிறது. இந்த சாலையில் பல இடங்களில் PVC கழிவு நீர் குழாய்கள் சாலையின் குறுக்கே கடந்து செல்கிறது. வாகனப் பயன்பாடு அதிகமுள்ள இச்சாலைகளில் பளு தாங்காமல் PVC குழாய்கள் அடிக்கடி சேதமடையும் நிலை உள்ளது. தற்பொழுது தார்ச்சாலையினை மறு சீரமைக்க இருப்பதால் பழைய, சேதமடைந்த PVC குழாய்களை அகற்றி 6 இடங்களில் பழு தாங்கக்கூடிய இரும்பு குழாய்களை அமைத்தால் கழிவுநீரை இலகுவாக கடத்துவதோடு அடிக்கடி பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ள அவசியம் எழாததோடு பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள சாலையினை தோண்டும் அவசியமும் ஏற்படாது. மேலும் சில இடங்களில் பழைய PVC குழாய்களை அகற்றி 6" PVC குழாய்கள் பதிக்கவேண்டியுள்ளது. எனவே, மேற்காணும் பணி மேற்கொள்ள ரூ.3,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கான செலவினம் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.600/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மேற்காணும் பணிக்கான செலவினம் ரூ3,00,000/-யை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.409**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 29</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 11.12.2022-ந் தேதிய நேரடி ஆய்வு அறிவுரையின்படியும், கீழக்கரை நகராட்சி தெருநாய்கள் தடுப்புக் குழு கூட்டம் நாள். 26.06.2023-ந் தேதிய கூட்ட தீர்மானத்தின்படியும், இந்நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படியும், கீழக்கரை நகராட்சி 1 முதல் 21 வார்டு பகுதிகளில் பராபரியாக சுற்றித் திரியும் நாய்களால் பொதுமக்களுக்கு அடிக்கடி அசம்பாவிதம் ஏதும் ஏற்படுவதை தடுக்கும் விதமாக, இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்க்குளம் பகுதியில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கு பகுதியில் பொதுமக்களுக்கு அசம்பாவிதம் ஏற்படுத்தும் தெரு நாய்களை பிடித்து அடைத்து வைப்பதற்கான கூடம் அமைக்கும் பணிக்கு ரூ. 6,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது

(கோப்பு எண்.602/2023/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவரச அவசியம் கருதி, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் மேற்படி செலவினம் ரூ. 6,50,000/-யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.410</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள் : 30</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11, தச்சர் தெரு 1-வது மெயின்ரோடு (S.M. லேத் அருகில்) மற்றும் தச்சர் தெரு 2 வது மெயின்ரோடு பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் ஓடை ஆங்காங்கு சேதமடைந்தும் மற்றம் Covering slab சேதமடைந்தும் உள்ளது. இதனால் மேற்படி பகுதியில் கழிவுநீர் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் ஓடையை கடந்து செல்ல இயலாமல் உள்ளது. எனவே, மேற்படி ஓடையை உயர்த்தி கட்டி RCC Cover Slab அமைத்து தருமாறு அப்பகுதி வார்டு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.6.35 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 17.02.2023-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 02.03.2023-ந் தேதி அன்று மேற்கண்ட பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது, மேற்கண்ட பணிக்கு வாறுகால் உயர்த்தி கட்டி கூடுதலாக பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்படி மதிப்பீடு ரூ.6.35 லட்சம் மதிப்பீட்டினை ரத்து செய்யப்பட்டு, மேற்கண்ட பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.8.50 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 851/2022/இ1)

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதி மதிப்பீடு ரூ.6.35 லட்சம் மதிப்பீட்டினை ரத்து செய்து, வாறுகால் உயர்த்தி கட்டி கூடுதலாக பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு திருத்திய மதிப்பீடு ரூ.8.50 லட்சத்திற்கு இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.411**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 31**

கீழக்கரை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான ஒரு கணினி மற்றும் கலர் பிரிண்டர் வாங்கும் பணிக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண். 309, நாள். 31.03.2023ன் படி அனுமதி பெறப்பட்டு, மேற்காணும் விவரப்படி ஒரு கணினி மற்றும் பிரிண்டர் சப்ளை செய்வதற்கு 30.05..2023-ந் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்று, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பொருட்கள் விபரம் | எண்ணம் | நிறுவனத்தின் பெயர்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | KSVC Enterprises, No. 995/1, SNT Complex, Alangudi Road, Pudhukottai | infingrow Smart Technologies, No.715-A, 7th Floor, Spencer Plaza, Suite No. 645, Mound Road, Anna Salai, Chennai | TEAM Information Technologies 5/2, TEAM Campus, Sambanthar Street, 3rd street, Subramaniapuram, North Karaikudi Sivagangai D.t. |
| 1 | Indel 13 Desktop with 8 GB RAM, 1 TB HIDD, Windows OS, MS Office | 1 | 43380 | 44600 | 47500 |
| 2 | EPSON All one MF Ink tank advantage color printer | 1 | 15900 | 16450 | 14500 |
| | | **Sub total** | **59280** | **61050** | **62000** |
| | | **GST 18%** | 10670 | 10989 | 11160 |
| | | **Total** | **69950** | **72039** | **73160** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி, **KSVC Enterprises** புதுக்கோட்டை நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை இந்நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 288/2023/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு பயன்பாட்டிற்குத் தேவையான ஒரு கணினி மற்றும் கலர் பிரிண்டர் சப்ளை செய்யும் பணிக்கு ரூ.69,950/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **KSVC Enterprises** புதுக்கோட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.412</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொருள் : 32</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் காணொலி ஆய்வு கூட்டத்தில், தமிழக அரசின் ஆண்டு சாதனையை விளக்குவதற்கு பிளக்ஸ் பேனர்கள் மற்றும் LED விளம்பர பலகைகள் வைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிளக்ஸ் பேனர்கள் மற்றும் LED விளம்பர பலகைகள் வைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.60,000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்காணும் பணியின் அவசியம் கருதி செலவினம் ரூ60,000/- யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண். 413</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொருள் : 33</u>

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் முக்கிய சாலையாக விளங்கும் வி.ஏ.ஓ. அலுவலகம் முதல் பழைய பெட்ரோல் பங்க் வரை உள்ள வள்ளல் சீதக்காதி சாலையில் நாள்தோறும் சாலையின் இருபுறங்களிலும், இரண்டு சக்கர வாகனங்கள் வரைமுறை இல்லாமல் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் தொடர்ந்து காணப்படுகிறது. அவற்றை தடுக்கும் பொருட்டு, துணை ஆட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் தலைமையில் கூட்டம் நடைபெற்று ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டு வள்ளல் சீதக்காதி சாலையின் இருபுறங்களிலும் தடிமனான கயிறு மற்றும் விளம்பர பலகையும் வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தடிமனான கயிறு மற்றும் விளம்பர பலகையும் வாங்குவதற்குன உத்தேச செலவினம் ரூ.1,30,000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களின் நலன் கருதி தடிமனான கயிறு மற்றும் 2 எண்ணம் விளம்பர பலகையும் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.1,30,000/- யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.414**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 34**

கீழக்கரை நகராட்சியில் தினமும் சேகாரமாகும் குப்பை கூளங்களை இந்கநராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்திற்குற்பட்ட பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் கொட்டுவதற்கு, இந்நகராட்சி வாகனம் பழுதாகி உள்ள நிலையில், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரையிலான பகுதிகளில் குப்பைகள் முழுமையாக அகற்றுவதற்கு, 1 எண்ணம் வாடகை டிராக்டர் மூலம் குப்பைகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பொதுசுகாதார நலன் அவசர அவசியம் கருதி வாடகை டிராக்டர் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை சேகரித்து நகராட்சி புதிய உரக்கிடங்கில் கொட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ1,25,000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்காணும் பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி செலவினம் ரூ1,25,000/- யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.415**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 35**

மண்டல இயக்குநர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை பூச்சியியல் ஆய்வாளர் அவர்களால், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட தட்டான்தோப்பு தெரு, ஆடறுத்தான் தெரு, கடற்கரை சாலை போன்ற பகுதிகளில் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் நிரந்தரமாக 14 கொசுப்புழு பணியாளர்கள் நியமித்துக் கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர் தர ஊதியத்தில் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 15 கொசுப்புழு பணியாளர்கள் நியமித்துக் கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.416**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 36**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தூய்மை இந்தியா திட்டம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு 'செழிப்பு' என்ற பெயரில் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி வேளாண்மைத் துறை செழிப்பு என்ற பெயரில் உரத்தினை விற்பனை செய்வதற்கு சான்றிதழ் பெறுவதற்காக வேளாண்மை துறைக்கு E-Chellan மூலம் ரூ.2250/- செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.417**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 37**

வடகிழக்கு பருவமழை 2023ம் ஆண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கு, கீழக்கரை நகர் மக்களின் பாதுகாப்பு ஏற்பாடு செய்வதற்கும், கீழக்கரை நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் நிரந்தர பொது சுகாதார பணியாளர்களுக்கு துப்புரவு பணிகளில் பயன்படுத்தப்படும் தளவாடப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ. 50,000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.418**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 38**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் எண்.TN65Q9563 வாகனத்திற்கு காப்பீடு செய்வதற்கு செலவின தொகை ரூ.44,229/-யை இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி நிறுவனத்திற்கு செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.419** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 39**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான TATA ACE வாகனங்கள் எண். TN65 AK2761, TN65 AK2793 மற்றும் TN65 AK2713 ஆகிய மூன்று வாகனங்களுக்கு தகுதி சான்று பெறுவதற்கு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திரு.ரா.பரக்கத்துல்லா அவர்களால் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.25,500/-னை மேற்படியாருக்கு திருப்பி வழங்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.420**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 40**

கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் சமீப காலமாக தெருநாய்கள் கடியால் பொதுமக்கள் மற்றும் சிறுவர் சிறுமியர் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தெருநாய்களின் பெருக்கத்தினை கட்டுப்படுத்த புற ஒப்படைப்பு முகமை மூலம் தெருநாய்களுக்கு இனபெருக்க கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் பணிக்கு (அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு, உணவு, மருந்துகள், அறுவை சிகிச்சை, அறுவை சிகிச்சைக்கு பிந்தை பராமரிப்பு உட்பட) தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 26.06.2023-ம் தேதி அன்று நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி ஆணையாளர், வட்டாட்சியர் கீழக்கரை மற்றும் கீழக்கரை அரசு மருத்துவமனை மருத்துவர் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி தெருநாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.421**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நகர்மன்ற தலைவர்**
**கீழக்கரை நகராட்சி**